**செ. வெ. எண். 128** **நாள். 16.02.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் 16.02.2012 அன்று நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் நடைபெற்றுவரும் பணிகள் குறித்து துறையின் செயலாளர், தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் ஆகியோருடன் ஆய்வினை மேற்கொண்டார்.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டபணிகளின் கீழ், நடப்பாண்டில் ஜனவரி மாதம் வரை சாலை மேம்பாடு மற்றும் பாலப்பணிகளுக்கு ரூ.943.45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கினங்க, வடகிழக்கு பருவமழை வெள்ளம் மற்றும் தானே புயலால் சேதமடைந்த சாலைகளை, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை பயன்படுத்தி சேதமடைந்த சாலைகளை பழுதுபார்க்கும் பணியை விரைந்து முடிக்கவும் சிறந்த முறையில் செப்பனிடபடவேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில், ரூ 3230.85 கோடி மதிப்பில் நடைபெற்றுவரும் 3979 பணிகளில் 1339 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள அனைத்து பணிகளையும் விரைவில் முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

சாலைகளை சிறந்த தரத்துடன் அமைக்க வேண்டும் என்றும் சாலைப்பணிகள் நடைபெறும் போது உரிய அதிகாரிகளால் கண்காணிக்கப் படவேண்டும் என்றும் கடந்த ஆய்வினை விட தற்போது வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும், இது மேலும் உயர வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**